மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

**அசல் வழக்கு எண். 194/2024**

**வா.சா. 1 ரத்தினப்பிரியா, த–பெ.இருளப்பன்**

நாள்: 01.07.2026

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc., B. Ed., படித்துள்ளேன். நான் தற்பொழுது எங்கே குடியிருந்து வருகிறேன் என்றால் கூமாபட்டியில் குடியிருந்து வருகிறேன். 1ம் வாதி பேபிராஜன் அவர்களுக்கு திருமணம் நடைபெற்ற சுமார் 20 வருடங்கள் இருக்குமா என்றால் 2008 வது வருடத்தில் திருமணம் நடைபெற்றது. 1வது வாதி திருமணமான நாள் முதலே விஸ்வநாதபேரியில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் 3 மற்றும் 4 வாதிகள் இளவராக இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விபரங்கள் தெரிவித்தது யார் என்றால் என்னுடைய அம்மா தெரிவித்தார்.

2) எங்களுடைய தாயார் 1வது வாதியின் பராமரிப்பில் தான் கடந்த 10 வருடங்களாக இருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாயார் ஆசிரியராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று விட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தாயார் ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி என்னுடைய தகப்பனார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனாரும்

ஆசிரியராக வேலை பார்த்து பணி ஓய்வு பெற்று விட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனாருக்கு 2 திருமணங்கள் என்று சொன்னால் சரிதான். முதல் திருமணத்தின் மூலமாக 3 பெண் வாரிசுகள் உள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். 2வது திருமணத்தின் மூலமாக 1 ஆண் மற்றும் 1 பெண் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான்.

3) என்னுடைய தகப்பனாரின் வாரிசுகள் திருமணம் முடிந்து தனித்தனியாக வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். 2வது திருமணத்தின் மூலமாக பிறந்த என்னுடைய தகப்பனாரின் மகன் ராஜா சமீபத்தில் இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் பிளவக்கல் விவசாய சங்கத்தில் தலைவராக இருந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் மற்றும் தாயார் ஆசிரியராக பணிபுரிந்து கிடைத்த வருமானத்தில் தான் எங்களை பராமரித்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தாயார் அவருடைய வருமானத்தில் தான் எங்களை பராமரித்து வந்தார். என்னுடைய தகப்பனாரும் சேர்ந்து தான் எங்களை படிக்க வைத்தார் என்றும் வழக்குக்காக என்னுடைய தாயார் படிக்க வைத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) வழக்கு சொத்து எங்களுடைய பெற்றோர்களின் கூட்டுச் சம்பாத்தியத்தில் வாங்கப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. 31.10.1996 அன்று என்னுடைய தாயார் பெயரில் வாங்கப்பட்ட கிரைய ஆவணம் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தை பிரதிவாதி தான் வங்கியில் அடமானம் வைத்துள்ளார் என்றும் வழக்குக்காக அடமானம்

வைக்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 3 மற்றும் 4 வாதிகளின் தாயார் ராஜஸ்ரீ என்னுடைய சகோதரி என்று சொன்னால் சரிதான். என்னுடைய சகோதரியின் கணவர் நீதிமன்றத்தில் பணிபுரிந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

5) என்னுடைய சகோதரி உடல் நலக்குறைவு காரணமாக காலம் சென்று விட்டார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய சகோதரி உயிருடன் இருந்த வரையில் சொத்து சம்பந்தமாக எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரி ராஜஸ்ரீ தான் எங்களுடைய தகப்பனாரை பராமரித்து வந்தார் என்றும் என்னுடைய சகோதரி ராஜஸ்ரீ சொல்லுவதை என்னுடைய தகப்பனார் கேட்டு வந்தார் என்றும் தற்பொழுது வழக்குக்காக இல்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தற்பொழுது குடியிருந்து வரும் வீடு 2 மாடிகள் கொண்ட வீடு என்று சொன்னால் சரிதான். தரைத்தளத்தில் நானும் என்னுடைய அம்மாவும் முதல் தளத்தில் 2 வது மனைவி குடியிருந்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். எனக்கு என்ன வயது இருக்கும் பொழுது என்னுடைய தகப்பனார் 2 வது திருமணம் செய்து கொண்டார் என்றால் 4 வயது இருக்கும் பொழுது 2 வது திருமணம் செய்து கொண்டார்.

6) 20.01.2015 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் பிரதிவாதி தரப்பினராகவும் சாட்சியாகவும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குச் சொத்து கிரையம் வாங்கிய நாள் முதல் தற்பொழுது வரை என்னுடைய

தகப்பனார் தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தான் தற்பொழுது வரை வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றும் வழக்குக்காக அனுபவம் செய்யவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 20.01.2015 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொண்ட பின்னர் தான் எங்களுடைய குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது என்றும் அதற்கு முன்பு பிரச்சனை கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

7) வழக்கு சொத்தினை கான்சாபுரம் கூட்டுறவு வங்கியில் பிரதிவாதி தொடர்ச்சியாக அடமானம் வைத்தும் விவசாயம் செய்தும் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு என்னுடைய தாயார் மற்றும் தகப்பனார் பெயரில் கூட்டு பட்டா இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் வழக்கு சொத்தில் என்னுடைய தகப்பனார் நெல் பயிரிட்டு இருந்தார் என்றும் அது சம்பந்தமாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம் என்றும் அந்த புகாரின் விசாரணை முடிவில் வழக்குச் சொத்தினை பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் அவருடைய அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்றும் நீதிமன்றம் மூலம் முறையாக பரிகாரம் தேடி கொள்ளுமாறு முடித்து வைக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

8) வழக்கு சொத்தினை கிரையம் வாங்கிய காலகட்டத்தில் அங்கு கிணறு கிடையாது என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தில் கிணறு

வெட்டி மின்சார வசதிகள் பெறுவதற்காக சொத்தினை என்னுடைய தகப்பனார் அடமானம் வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்துக்கள் ஒரே சொத்து என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து கான்சாபுரம் செல்லும் தென்வடல் ரோட்டுக்கு கிழக்கு பக்கம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்கு எப்பொழுது எங்களுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. முறையாக விசாரணை செய்யப்படாமல் பட்டா எங்களுடைய பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9) வழக்கு சொத்துக்கு தீர்வை என்னுடைய தகப்பனார் தான் ஆரம்ப காலத்தில் இருந்தே தற்பொழுது வரை செலுத்தி வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்காமல் உறுத்து கட்டளை பரிகாரம் மட்டும் தான் கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். 3 மற்றும் 4 வாதிகள் திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களை நாங்கள் எந்த காலகட்டத்திலும் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றும் வழக்குக்காக அனுபவம் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை தற்பொழுது வரை என்னுடைய தகப்பனார் தான் அனுபவம் செய்து வருகிறார் என்றும் என்னுடைய தாயார் எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

10) மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. அனுபவத்தில் இல்லாத சொத்துக்களை பொறுத்து நான் கேட்டுள்ள உறுத்து கட்டளை பரிகாரம் எங்களுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு